ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ சம்புநடனம் – நடேசாஷ்டகம்

ஸ்ரீகாந்தோ மாதுலோ யஸ்ய ஜனனீ ஸர்வமங்கலா |
ஜனக : ஶங்கரோ தேவ : தம் வந்தே குஞ்ஜரானனம் ||

எவர்க்கு அம்மான் லக்ஷ்மீபதியோ, தாயார் ஸர்வமங்கலையோ, தகப்பனார் சங்கரனோ அந்தக் கரிமுகத்தானை வணங்குகிறேன்.

ஸதஞ்சிதம் உதஞ்சித நிகுஞ்சிதபதம்
ஜலஜ்ஜலஞ்சலித மஞ்ஜுகடகம்
பதஞ்ஜளி த்ருகஞ்ஜநம் அநஞ்ஜநம்
அசஞ்சலபதம் ஜநந பஞ்சநகரம் |
கதம்பருசிம் அம்பரவஸம் பரமம் அம்புத
கதம்பக விடம்பக கலம்
சிதம்புதமணிம் புத ஹ்ருதம்புஜ ரவிம்
பரசிதம்பரநடம் ஹ்ருதி பஜ ||1||

ஸத்புருஷர்களால் பூஜிக்கப்பட்டவரும் உயர்த்தியும் தாழ்த்தப்பட்டதுமான காலையுடையவரும், ஜல் ஜல் என்று சப்திக்கும் அழகிய வளைகளையுடையவரும், பதஞ்ஜலி மஹர்ஷியின் கண்ணுக்கு அஞ்ஜனம் போன்றவரும், மாசற்றவரும், அசையாமலிருக்கும் பாதங்களையுடையவரும், பிறவியைத் தடுப்பவரும், கடப்பமரத்தில் ருசியுடையவரும், ஆகாயத்தை வஸ்த்ரமாகவுடையவரும், உயர்ந்தவரும், மேகக் கூட்டத்தைப் போன்ற கழுத்தையுடையவரும் சித்ஸ்வரூபமாயும் சிறந்த மேகம் போன்றவரும் பண்டிதர்களுடைய ஹ்ருதயங்களாகிற தாமரைப் புஷ்பங்களுக்கு ஸூர்யன் போன்றவரும் உயர்ந்த சித்தாகிற ஆகாசத்தில் நடனமாடுவதுமாயிருப்பவரை மனதில் ஸேவிப்பாயாக.

ஹரம் த்ரிபுர பஞ்ஜநம் அநந்தக்ருத கங்கணம்
அகண்டதயம் அந்த ரஹிதம்
விரிஞ்சி ஸுர ஸம்ஹநி புரந்தர விசிந்திதபதம்
தருண சந்தர முகுடம் |
பரம் பத விகண்டித யமம் பஸித மண்டிததநும்
மதந வஞ்சந பரம்
சிரந்தநம் அமும் ப்ரணத ஸஞ்சித நிதிம்
பர சிதம்பர நடம் ஹ்ருதி பஜ || 2 ||

பாபங்களைப் போக்குபவரும், திரிபுரங்களை எரித்தவரும், ஆதிஸேஷனாலான கங்கணத்தைப் பூண்டவரும், அழிவில்லாத தயையை யுடையவரும், முடிவில்லாதவரும், ப்ரஹ்மா தேவக் கூட்டங்கள் இந்திரன் இவர்களால் ஸ்மரிக்கப்பட்ட காலையுடையவரும், சந்திரனைத் தலையில் தாங்கியவரும், உயர்ந்தவரும், காலால் உதைத்துத் தள்ளப்பட்ட யமனையுடையவரும், பஸ்மத்தால் அழகுபடுத்தப்பட்ட மேனியையுடையவரும், மன்மதனை ஏமாற்றியவரும், பழமையானவரும், ஆச்ரயித்தவர்களுக்குச் சேமித்து வைத்த நிதி போன்றவரும், உயர்ந்த சிதம்பரத்தில் நடனம் செய்பவருமானவரை மனதில் ஸேவிப்பாயாக.

அவந்தம் அகிலம் ஜகத் அபங்ககுணதிங்கம் அமதம்
த்ருத விதும் ஸுரஸரித்
தரங்க நிகுரும்ப த்ருதி லம்பட ஜடம்
*ஶ*மந டம்பர ஹரம் பவ ஹரம் |
*ஶி*வம் த*ஶ* திகந்தர விஜ்ரும்பித கரம்
கர லஸந் ம்ருக*ஶிஶு*ம் ப*ஶு*பதிம்
ஹரம் *ஶஶி* தநஞ்ஜய பதங்க நயநம்
பர சிதம்பர நடம் ஹ்ருதி பஜ || 3 ||

எல்லா வுலகங்களைக் காப்பவரும், முடிவில்லாத குணங்களால் பெருமை பெற்றவரும், தன்நினைவற்றவரும், சந்திரனைத் தரிப்பவரும், ஆகாய கங்கையின் அலைகளைத் தாங்குவதில் சக்தி வாய்ந்த ஜடைகளை யுடையவரும், யமனுடைய கர்வத்தைப் போக்குபவரும், ஸம்ஸாரத்தை அழிப்பவரும், மங்கலமூர்த்தியும், பத்து திக்குகளிலும் (நடனமாடும்போது) சுழன்றுவரும் கைகளையுடையவரும், கையில் மான் குட்டியை யுடையவரும், பசுக்களைக் காப்பாற்றுபவரும், பாவத்தைப் போக்குபவரும், சந்திரன் அக்நி ஸூர்யன் இவர்களைக் கண்களாக உடையவரும், உயர்ந்த சிதம்பரத்தில் நடநம் செய்பவருமானவரை மனதில் ஸேவிப்பாயாக.

அநந்த நவரத்ந விலஸத்கடக
கிங்கிணி ஜலஞ்ஜல ஜலஞ்ஜலரவம்
முகுந்த விதி ஹஸ்தகத மத்தல லய
த்வநி திமித்திமித நர்(த்)தந பதம் |
ஶகுந்தரத பர்ஹிரத நந்திமுக
தந்திமுக ப்ருங்கிரிடி ஸங்க நிகடம்
ஸநந்த ஸநக ப்ரமுக வந்தித பதம்
பர சிதம்பர நடம் ஹ்ருதி பஜ || 4 ||

கணக்கற்ற நவரத்நங்களால் விளங்கும் வளைகிங்குணிகளின் ஜலஞ்ஜல ஜலஞ்ஜல என்கிற சப்தமுடையவரும், விஷ்ணு ப்ரஹ்மா இவர்களுடைய கைகளிலுள்ள மத்தளங்களின் ஆழ்ந்த சப்தத்துக்குத் (தகுந்தபடி) திமித்திமி என்று கூத்தாடும் கால்களையுடையவரும், விஷ்ணு ஸுப்ரஹ்மண்யன் நந்தி முதலியவர்கள் யானை முகத்தான் ப்ருங்கிரிடி இவர்களால் சூழப் பெற்றவரும், ஸநந்தர் ஸநகர் முதலியவர்களால் வணங்கப் பெற்ற காலையுடையவரும், உயர்ந்த சிதம்பரத்தில் நடநம் செய்பவருமானவரை மனதில் ஸேவிப்பாயாக.

அநந்த மஹிமம் த்ரிதஸ வந்த்ய சரணம்
முநி ஹ்ருதந்தர வஸந்தம் அமலம்
கபந்த வியதிந்த்வவநி கந்தவஹ
வஹ்நி மகபந்து ரவி மஞ்ஜு வபுஷம் |
அநந்த விபவம் த்ரிஜகதந்தர மணிம்
த்ரிணயநம் த்ரிபுர கண்டந பரம்
ஸநந்தமுநி வந்திதபதம் ஸகருணம்
பர சிதம்பர நடம் ஹ்ருதி பஜ || 5 ||

எல்லையற்ற மஹிமை பொருந்தியவரும், தேவதைகளால் வணங்கப்பெற்ற கால்களையுடையவரும், ருஷிகளுடைய மனத்துக்குள் வாஸம் செய்பவரும், மாசற்றவரும், ஜலம் ஆகாயம் சந்திரன் பூமி காற்றூ அக்நி ஸூர்யன் இவர்களாலான அழகிய மேனியையுடையவரும், கணக்கிலாத மேன்மை பொருந்தியவரும், மூவுலகில் மணி போன்றவரும், முக்கண் படைத்தவரும், திரிபுரத்தை நாசம் செய்தவரும், ஸநந்தருஷியால் ஸேவிக்கப்பட்ட கால்களையுடையவரும், தயையுள்ளவரும், உயர்ந்த சிதம்பரத்தில் நடநம் செய்பவருமானவரை மனதில் ஸேவிப்பாயாக.

அசிந்த்யம் அலிப்ருந்த ருசிபந்துர
கல ஸ்புயத குந்த நிகுரும்ப தவலம்
முகுந்த ஸூரப்ருந்த பலஹந்த்ரு க்ருதவந்தந
லஸந்தம் அஹிகுண்டல தரம் |
அகம்பம் அநுகம்பித ரதிம் ஸூஜந
மங்கல நிதிம் கஜஹரம் பஸூபதிம்
தநஞ்ஜய நுதம் ப்ரணத ரஞ்ஜந பரம்
பர சிதம்பர நடம் ஹ்ருதி பஜ || 6 ||

சிந்திக்க முடியாதவரும், வண்டுக்கூட்டத்தின் காந்திபோல் அழகான கழுத்தில் விளங்கும் குருக்கத்திபூவினால் வேளுப்பாயும், விஷ்ணு தேவக்கூட்டம் இந்திரன் இவர்களால் ஸேவிக்கப்பெற்று விளங்குப்வரும், ஸர்ப்பங்களைக் குண்டங்களாக தரிப்பவரும், அசையாதவரும், ரதிதேவியிடம் கருணை காட்டியவரும், நல்லவர்களுக்கு மங்கள நிதிபோன்றவரும், கஜாஸுரனை அழித்தவரும் பசுக்களைக் காப்பாற்றுபவரும், அர்ஜுனனால் போற்றப் பெற்றவரும், ஆச் ரிதர்களை திருப்தி செய்வதில் ஊக்கமுடையவரும், உயர்ந்த சிதம்பரத்தில் நடநம் செய்யுமவரானவரை மனதில் ஸேவிப்பாயாக.

பரம் ஸுரவரம் புரஹரம் பஶுபதிம்
ஜநிக தந்திமுக ஷண்முகம் அமும்
ம்ருடம் கநக பிங்கள ஜடம் ஸநக
பங்கஜ ரவிம் ஸுமநஸல் ஹிமருசிம் |
அஸங்க மநஸம் ஜலதி ஜந்ம கரலம்
கபலயந்தம் அதுலம் குண நிதிம்
ஸநந்ந வரதம் ஶமிதம் இந்துவதநம்
பர சிதம்பர நடம் ஹ்ருதி பஜ || 7 ||

மேலானவரும், தேவதைகளுக்குள் ச்ரேஷ்டராயும், முப்புரமெரித்தவரும், பசுக்களைக் காப்பவரும், யானைமுகன் ஆறுமுகன் இவர்களைப் பிறப்பித்தவரும், தங்கவர்ணமான ஜடையையுடையவரும், ஸநகராகிற தாமரைக்கு ஸுர்யன் போன்றவரும், நல்ல மனதை உடையவரும், பனிபோன்ற காந்தியையுடையவரும், பற்றில்லாத மனமுடையவரும், கடலில் பிறந்த விஷத்தைச் சாப்பிட்டவரும், ஒப்பற்றவரும், குணங்களுக்கு இருப்பிடமாயும், ஸநந்தருக்கு வரமளிப்பவரும், சாந்தியை யுடையவரும், சந்திரன் போன்ற முகமுடையவரும், உயர்ந்த சிதம்பரத்தில் நடநமாடுபவருமான இந்த சிவபிரானை மனதில் ஸேவிப்பாயாக.

அஜம் க்ஷிதிரம் புஜக புங்கவ குணம்
கநக ஸ்ருங்கி தநுஷம் கரலஸத்
குரங்க ப்ருது டங்க பரசும் ருசிர
குங்கும ருசிம் டமருகஞ்ச தததம் |
முகுந்த விஸிகம் நமதவந்த்ய பலதம்
நிகம ப்ருந்த துரகம் நிருபமம்
ஸ சண்முகம் அமும் ஜடிதி ஸம்ஹ்ருத புரம்
பர சிதம்பர நடம் ஹ்ருதி பஜ || 8 ||

பிறப்பில்லாதவரும், பூமியை தேராகவும் ஆதிசேஷனை நாணாகவும் மேருமலையை வில்லாகவுமுடையவரும், கையில் விளங்கும் மான் பெரிய க்ல்லுளி கோடாலி இவைகளை உடையவரும், அழகிய குங்குமம் போன்ற காந்தியையுடையவரும், டமருகம் என்கிற வாத்யத்தையும் தரித்தவரும், விஷ்ணுவை பாணமாக உடையவரும், வணங்குபவர்களுக்கு நல்ல பயனை அளிப்பவரும், வேதக் கூட்டத்துக்குக் குதிரை போன்றவரும், ஒப்பற்றவரும், சண்டிகையோடு வாழுபவரும், த்ரிபுர ஸம்ஹாரம் செய்தவரும், உயர்ந்த சிதம்பரத்தில் நடநம் செய்பவருமான இவரை சீக்ரமாக மனதில் ஸேவிப்பாயாக.

அநங்க பரிபந்திநம் அஜம் க்ஷிதி துரந்தரம்
அமலம் கருணயந்தம் அகிலம்
ஜ்வலந்தம் அனலம் தததம் அந்தகரிபும்
ஸததம் இந்த்ரஸுர வந்தித பதம் |
உதஞ்சத் அரவிந்த குல பந்து ஸத பிம்ப
ருசி ஸம்ஹதி ஸுகந்தி வபுஷம்
பதஞ்ஜலி நுதம் ப்ரணவ பஞ்ஜர ஸுகம்
பர சிதம்பர நடம் பஜ || 9 ||

மன்மதனை அழித்தவரும், பிறப்பில்லாதவரும், பூமியைத் தாங்குபவரும், பலிஷ்டரும், மாசற்றவரும், யாவரையும் கருணையுடன் பார்ப்பவரும், எரியும் அக்னியைத் தரிப்பவரும், யமனை வென்றவரும், எப்போதும் இந்திரனாலும் தேவதைகளாலும் அடிவணங்கப் பெற்றவரும், மலர்ந்த தாமரைக்கு பந்துவான நூறு ஸுர்யர்களுடைய கிரணங்கள் போன்றவரும், நறுமணமுள்ள மேனியை உடையவரும், பதஞ்ஜலி மஹர்ஷியால் துதிசெய்யப் பெற்றவரும், ப்ரணவமாகிற கூட்டில் கிளிபோன்றவரும், உயர்ந்த சிதம்பரத்தில் நடனம் செய்பவருமானவரை மனதில் ஸேவிப்பாயாக.

**இதி ஸ்தவம் அமும் புஜக புங்கவ க்ருதம்**
**ப்ரதிதினம் படதி ய : க்ருதமுக :**
**ஸத: ப்ரபு பதத்விதய தர்சநபதம்**
**ஸுலலிதம் சரண *ஸ்*ருங்க ரஹிதம் |**
**ஸர:ப்ரபவ ஸம்பவ ஹரித்பதி ஹரி**
**ப்ரமுக திவ்ய நுத *ஸ*ங்கரபதம்**
**ஸ கச்சதி பரம் நது ஜநுர் ஜலநிதிம்**
**பரம து:க ஜநகம் துரிததம் || 10 ||**

இம்மாதிரியாகப் பதஞ்ஜலிருஷியால் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை முகத்தில் வைத்துக்கொண்டு நாடோறும் எவன் படிக்கிறானோ அவன், உயர்ந்தாலும் *ஸதஸில்* ப்ரபு போன்ற இரண்டு பாதங்கலைக் காணுமிடமாயும், மிக்க அழகியதும், கால் கொம்புகள் அற்றதும், பிரமன் திக்பாலகர்கள் விஷ்ணு முதலிய தேவர்களால் துதிசெய்யப்பெற்றதுமான சங்கரன் பாதத்தை அடைகிறான். அதிக துக்கத்தை உண்டுபண்ணுமதுவும் பாபங்களைக் கொடுக்குமதுவுமான பிறவிக்கடலை அடைவதில்லை.

**இதி ஸ்ரீ பதஞ்ஜலிவிரசிதம் ஸ்ரீ *ஸ*ம்புநடனம் – நடே*ஸா*ஷ்டகம் ஸம்பூர்ணம்.**

ஸ்ரீ பதஞ்ஜலி முனிவரால் செய்யப்பெற்ற ஸ்ரீ சம்புநடநம் – நடேசாஷ்டகம் முற்றிற்று